தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.

ந.க. எண் 02898/டி1/2013 நாள் 11 .05.2013

பொருள் : தமிழ்நாடு தொடக்கக் கல்வி – 2013–2014ஆம் கல்வி ஆண்டு – ஆசிரியர் பொது மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வு – நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1. அரசாணை (1டி) எண் 270, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 10.07.2012
2. அரசாணை (1டி) எண் 129, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 09.05.2013
3. Chennai, High Court,M.P. Nos. 1 & 2 / 2013 in W.A. No. 529 / 2013 Dated.29.04.2013

... ... ...

பார்வையில் காணும் அரசாணையில் 2013–2014ஆம் கல்வியாண்டில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பொதுமாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வு மூலம் நடத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

2013–2014ம் ஆண்டு பொதுமாறுதலுக்கான ஆசிரியர்களின் விண்ணப்ப மாதிரிப் படிவம் மற்றும் பொதுமாறுதல் / பதவி உயர்வு கலந்தாய்வுக்குரிய காலஅட்டவணை ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளன. அதன்படி ஆசிரியர்களிடமிருந்து பொதுமாறுதல் விண்ணப்பங்களைப் பெற்று, காலஅட்டவணையைப் பின்பற்றி பொதுமாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வினை புகாருக்கிடமின்றி நடத்துமாறு அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பொதுமாறுதல் வழங்கும் போது முதலில் ஒன்றியத்திற்குள் / நகராட்சிக்குள் உள்ள ஆசிரியர்களுக்கு மாறுதல் அளித்துவிட்டு, பின்னர் ஏற்படும் காலிப்பணியிடங்களில் 2012–2013ம் கல்வியாண்டில் ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவலில் சென்ற ஆசிரியர்களுக்கு முன்னுரிமைப்படி மாறுதல் அளிக்கப்பட வேண்டும்.

பட்டதாரி ஆசிரியர்கள் பதவி உயர்வு குறித்து பார்வை 3ல் உள்ள வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், ஒன்றியத்திற்குள் மாறுதல் மட்டுமே கலந்தாய்வு மூலம் தற்போது வழங்கப்படவேண்டும்.

கலந்தாய்வு எவ்விதப் புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் நடைபெற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு :

1. அரசாணை 129
2. மாறுதல் விண்ணப்பம்
3. கலந்தாய்வு கால அட்டவணை

11/5

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்

## தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை – 600 006.

## ஆசிரியர் மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுக்கான கால அட்டவணை

| நாள் | காலம் | நிகழ்ச்சி நிரல் |
|---|---|---|
| 13.05.2013 முதல் 17.05.2013 | 5 நாள்கள் | ஆசிரியர்கள மாறுதல் விண்ணப்பங்களை உதவித் தொடக்கக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும் |
| 20.05.2013 | 1 நாள் | உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், தங்களது ஒன்றியத்திலுள்ள அனைத்து மாறுதல் விண்ணப்பங்களையும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் |
| 21.05.2013 முதல் 22.05.2013 | 2 நாள் | மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் ABC படிவங்களை தயார் செய்ய வேண்டும் |
| 23.05.2013 | 1 நாள் | மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டத்திற்கு மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் அனுப்ப வேண்டும் (தொடக்கக் கல்வி இயக்ககத்தில்) |
| 24.05.2013 | முற்பகல் | உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்களின் மாறுதல் ஆணை வழங்குதல் |
| 25.05.2013 | முற்பகல் | நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பதவியிலிருந்து உதவித் தொடக்கக்கல்வி அலுவலராக பணிமாறுதல் ஆணை வழங்குதல் |
| 28.05.2013 | முற்பகல் | நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மாறுதல் ஆணை வழங்குதல் |
| 28.05.2013 | முற்பகல் | நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியராக பதவி உயர்வு ஆணை வழங்குதல் |
| 28.05.2013 | பிற்பகல் | பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒன்றியத்திற்குள் மாறுதல் ஆணை வழங்குதல் |
| 29.05.2013 | முற்பகல் | தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மாறுதல் ஆணை வழங்குதல் |
| 29.05.2013 | பிற்பகல் | தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியராக பதவி உயர்வு ஆணை வழங்குதல் |
| 30.05.2013 | முற்பகல் | இடைநிலை ஆசிரியர் ஒன்றியத்திற்குள் மாறுதல் வழங்குதல் |
| 30.05.2013 | பிற்பகல் | இடைநிலை ஆசிரியர் மாவட்டத்திற்குள் மாறுதல் வழங்குதல் (ஒன்றியம் விட்டு ஒன்றியம்) |
| 31.05.2013 | முற்பகல் | இடைநிலை ஆசிரியர் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் வழங்குதல் |

தொடக்கக் கல்வி இயக்குநர்